


**26. 08. 2025**

தலைப்பு செய்திகள்

1.இந்தியாவில் தயாரிப்போம் பாதையில் புதிய அத்தியாயம் இன்று தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திமோடி பெருமிதம் தெரிவித்தார்.

2. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானபடை தளவாடமான சுதர்ஷன் சக்ரா நம் தேசத்தின் பாதுகாப்பு அரணாக திகழும் என்று முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில்சௌஹான் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் 2 ஆயிரத்து 429 நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலைஉணவு திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

4. காலை உணவின் தரத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டியதன் அவசியத்தை பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வலிறுத்தியுள்ளார்.

5. பாரீசில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட போட்டியின் ஒற்றையர் முதல்சுற்று ஆட்டங்களில் **P.V.**சிந்து, **H.S.** பிரணாய் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியாவில் தயாரிப்போம் பாதையில் புதிய அத்தியாயம் இன்று தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திமோடி பெருமிதம் தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் அஹமதாபாத் ஹன்சல்பூரில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பேட்டரி மின்சார வாகன ஏற்றுமதியை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், இந்தியாவில் தயாரிப்போம் இலக்கிலிருந்து உலகத்திற்காக தயாரிப்போம் என்ற மிகப்பெரிய பாதையில் நாம் அடியெடுத்து வைத்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

நம் நாட்டிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு மின்வாகனங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதோடு, கலப்பின பேட்டரி மின்முனைகள் உற்பத்தியும் இன்று தொடங்கியதை சுட்டிக்காட்டினார்.

இந்திய ஜப்பான் நட்புறவில் ஒரு புதிய பரிமாணம் உருவாகி உள்ளதாக கூறியஅவர், வருங்காலங்களில் புதிய தொழில்நுட்பங்கள் முனைப்புடன் உருவாகும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனநாயகமே நம்நாட்டின் வலிமை என்று கூறியஅவர், மக்கள் தொகையும், திறன் மேம்பாடு செயல்திட்டங்களை கொண்ட இளையோர் படையும் நம்மிடம் உள்ளதாக தெரிவித்தார்.

இதனால் நம்நாட்டின் நட்புறவு நாடுகளுக்கு வெற்றி கிட்டுவதாகவும் எடுத்துரைத்தார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் முக்கிய சின்னங்களாக கார் தயாரிக்கும் நிறுவனங்கள் உருவாகியிருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சில காலங்களுக்கு முன்வரை பேட்டரி இறக்குமதி செய்யப்பட்டதாக கூறியஅவர், நம்நாட்டிலேயே இதனை உருவாக்கும் வகையில் கடந்த 2017-ம் ஆண்டு இதற்கான அடித்தளம் ஏற்படுத்தப்பட்டதாக கூறினார்.

முன்னதாக பிரதமர் வெளியிட்ட வலைதளப் பதிவில் சுயசார்பு பாரதம் மற்றும் பசுமை வாகனங்களின் மையமாக இந்தியா உருவாவதற்கு இன்றைய தினம் முக்கியத்துவம் பெறுவதாக கூறினார்.

நம் நாட்டின் பேட்டரி தயாரிப்பு சூழலுக்கு மிகப்பெரிய உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை தளத்தில் உதயகிரி மற்றும் ஹிம்கிரி ஆகிய போர்க்கப்பல்கள் இந்திய கடற்படையுடன் இன்று இணைக்கப்படுகின்றன.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.

உள்நாட்டு அதிநவீன தொழில்நுட்பத்துடன் இருவேறு கப்பல்கட்டும் தளங்களில் கட்டப்பட்ட போர்க்கப்பல்கள் ஒரே நேரத்தில் இணைக்கப்படுவது இதுவே முதல்முறையாகும் என்று அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

<u>அனில் சௌஹான்</u>

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுத தளவாடமான சுதர்ஷன் சக்ரா நம் தேசத்தின் முக்கிய பாதுகாப்பு அரணாக திகழும் என்று முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில்சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்தின் ராணுவ கல்லூரியில் முப்படைகளின் 2 நாள் கருத்தரங்களில் இன்று தலைமையுரையாற்றிய அவர், துரித உள்நாட்டு தளவாட உற்பத்தி மேம்பாட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

எதிரிகளின் வான் ஆயுதங்களை கண்டறிந்து அவற்றை கைப்பற்றி தகர்த்தெறிய மென் மற்றும் வன் தொழில்நுட்பங்கள் மிக முக்கிய பங்காற்றும் என்றும் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் மூலம் நாம் பல பாடங்களை கற்றுக்கொண்டதோடு, சிலவற்றை நடைமுறைப்படுத்தி இருப்பதாகவும், வேறுசில செயல்பாட்டிற்கு தயாராக உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

அரசியல் நிலைப்பாடுகளுக்கு மேலாக தொழில்நுட்பம் உருவாவதாக எடுத்துரைத்த அவர், எதிர்கால போர் நடவடிக்கைகளின் அனைத்து அம்சங்களிலும் கூட்டு அதிரடி நடவடிக்கைகள் தேவை என்று குறிப்பிட்டார்.

பாதுகாப்பு உற்பத்தியில் சுயசார்பை வலியுறுத்திய அவர், ஒருங்கிணைந்த தளவாட தயாரிப்புகள், செயற்கை நுண்ணறிவு பயன்பாடு, சைபர் மற்றும் குவாண்டம் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மூலம் ராணுவ செயல்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>உச்சநீதிமன்றம்</u>

உயர்நீதிமன்றங்களில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து கவலை தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், இதனால் நீதியியல் துறை மீதான நம்பிக்கை குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரித்த நீதிபதிகள் சஞ்சய் கரோல், பிரசாந்த் குமார் அடங்கிய அமர்வு, ஒரு வழக்கில் விசாரணை முடிந்தபின் 3 மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்கப்படாவிட்டால் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் கவனத்திற்கு, தலைமை பதிவாளர் எடுத்துச்செல்ல வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் விசாரணை முடிந்த பின்னரும் ஓராண்டிற்கு மேல், ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கப்படாதது குறித்து நீதிமன்றம் கேள்வி எழுப்பியது

மேலும் உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தல் அனைத்து உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

<u>**V.B.** வைத்யா</u>

பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்த தயாரிப்பு திட்டங்களின் அவசியத்தை இந்த இயக்கத்தின் தலைமை இயக்குநர் **V.B.**வைத்யா அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் பேரிடர் மீட்பு திறன் நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பான கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், பேரிடர் சவால்களை துரிதமாக எதிர்கொண்டு அறிவியல் ரிதியான நடவடிக்கைகளையும், நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்.

பேரிடர் மீட்டு முகமைகளுக்கும், மருத்துவ குழுவினருக்கும் இடையே ஒருங்கிணைப்பை அதிகரிப்பதே இந்த கருத்தரங்கின் முக்கிய நோக்கம் என்று கூறியஅவர், அவசர காலங்களில் ஒருங்கிணைந்த அணுகுமுறையால் பெருமளவு பாதிப்புகளை தவிர்க்கமுடியும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

ஜார்ஜ்குரியன்

சிறுபான்மையின சமூக மேம்பாட்டிற்கான மத்திய அரசின் வலுவான செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை மத்திய சிறுபான்மையின விவகாரங்களுக்கான இணையமைச்சர் திரு. ஜார்ஜ்குரியன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கொச்சியில் மண்டல முகமைகள் ஆய்வுக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், பிரதமரின் வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட இம்முகமைகள் பங்களிப்பு வழங்க வேண்டுமென்று என்று கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டின் அனைத்து துறைகளையும் நாட்டிலேயே முதன்மையானதாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்து 429 நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்தால் பள்ளிக்கு வரும் மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழக பள்ளிகளில் காலை உணவின் தரத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டியதன் அவசியத்தை பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் இன்றுவெளியிட்ட சமூக வலைதளப்பதிவில் தேசிய கல்விக்கொள்கையின் அங்கமாக காலை உணவு திட்டம் இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவில் நடக்கும் குளறுபடிகளை அரசு சரிசெய்ய வேண்டுமென்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

அனிதா ராதாகிருஷ்ணன்

தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு சுமூக தீர்வுகாணும் வகையில் கச்சத்தீவை மீட்க வேண்டும் என்பதில் தமிழக அரசு உறுதியுடன் இருப்பதாக மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கச்சத்தீவை மீட்பதில் மத்தியஅரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றார்.

உச்சநீதிமன்றத்தில் தமிழகஅரசு இதுதொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

<u>விநாயகர் சதுர்த்தி</u>

விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்படுகிறது.

மாநிலம் முழுவதும் 13 ஆயிரம் இடங்களில் 35 ஆயிரம் விநாயகர் சிலைகள் அமைக்கப்படவுள்ள நிலையில் பாதுகாப்பு பணியில் ஒருலட்சம் காவல்துறையினர் ஈடுபடுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் ஒருகிலோ மல்லிகைப் பூ ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

<u>சிவகங்கை வாய்ஸ்</u>

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் இயந்திரமாக்கலின் துணை பணி திட்டத்தின்கீழ் 30 விவசாயிகளுக்கு 66 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இயந்திரங்கள் வழங்கப்பட்டதாக மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி. சத்யா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

<u>நாகை</u>

நாகை மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ், கடற்பாசி வளர்ப்பு மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி பயனளிப்பதாக மீனவப்பெண்கள் தெரிவிக்கின்றனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

<u>பேட்மிட்டன்</u>

பாரீசில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட போட்டியின் மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் **P.V.** சிந்து – பல்கேரியாவின் **Nalbantova** -வையும்,

ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் **H.S.** பிரணாய் - ∴பின்லாந்தின் ஜொயாக்கீமையும் இன்றுமாலை எதிர்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖